**சிலாபம் பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலாபம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(IV) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் மோட்டர் கிரேடரினை வாடகைக்கு வழங்கிய வருமானமாகக் கிடைத்த ரூபா 230,744 தொகை வருமானமாக இனங்காணப்படாது கலப்பு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டிற்கான வருமானமான ரூபா 226,300 தொகை குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட 04 வைப்புக்களின் மொத்தமாகிய ரூபா 133,038 கலப்பு வைப்புக் கணக்கின் மீதிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் | அவ்வாறு ரூபா 226,300 தொகையும் வைப்பு பதிவேட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | ஆண்டிற்கான வருமானத்தை தவிரத்துக் கொள்ளாது கணக்குகளுக்கு எடுத்துக் கொள்ள வேண்டியதுடன் கணக்காண்டிற் கான வைப்பு மாத்திரம் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது உரிய வைப்புக் கணக்குகளில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதித் திகதியில் உள்ளவாறான கலப்பு வைப்புக் கணக்கின் மீதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | முன்னேஸ்வரம் ஓய்வு மண்டபமாக இனங்காணப்பட்ட ஒரு சொதது காணி கட்டிட பதிவேட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும் அவ்வாறான ஒன்றை திருத்தம் செய்வதற்காக ரூபா 7,357,394 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை ரூபா 5,269,292 தொகை அதற்காக செலுத்தப்பட்டிருந்ததுடன் இச்செலவு மூலதனத் தன்மையாக இருந்த போதிலும் மீண்டுவரும் செலவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது கட்டிடம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நாட்குறிப்பு பதிவின் மூலம் சரியாக கணக்கீடு செய்யப்படும் என தெரிவிக்கின்றேன். | மீண்டுவரும் மற்றும் மூலதனத் தன்மையான செலவுகளை முறையாக இனங்கண்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | ரூபா 258,175,088 தொகையான நிலுவையாக இருந்த மூலதன உதவி மீதி முறையாக வகைப்படுத்தப்பட்டிருக்காத துடன் அது பெற வேண்டிய தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், வருமான உதவி ஆகிய மீதிகளை உள்ளடக்கியிருந்தது. | மீண்டும் அந்த துணைப் பதிவேடு விபரமாக சமர்ப்பிக்கப்படுமென தயவாகத் தெரிவிக்கின்றேன். | மூலதன உதவியினுள் வருமான உதவி உள்ளடக்கப்படாத வகையில் முறையான வகைப் படுத்தலோடு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு விடயங்கள் தொடர்பான ரூபா 319,507,736 பெறுமதியானது அதனுடன் தொடர்புபட்ட அறிக்கையின் பிரகாரம் ரூபா 300,290,453 ஆக இருந்ததனால் கணக்கு பெறுமதிகளுக்கிடையே ரூபா 19,217,283 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்று மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்வதுடன் அது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து 2021-12-31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | வித்தியாசத்தை இனங்கண்டு துணைப் பதிவேடுகள் மற்றும் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காததன் காரணமாக ரூபா 132,589,464 தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்தியாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து கின்ற எழுத்துமூல சான்றுகளையும் பட்டியல்களையும் நாளதுவரையாகச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 73,355,184 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 80,787,587 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வீதவரியும் வரியும் | | |
| வீதவரியும் வரியும் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த மீதியில் மற்றும் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட பெறுமதியில் ரூபா 2,786,282 மொத்த தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | நிலுவைப் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வாடகை | | |
| வாடகை வருட ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த மீதிகள் மற்றும் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட பெறுமதியில் ரூபா 1,266,777 மொத்த தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் அறவிடப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) ஏனைய வருமானங்கள்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 120,442,542 நிலுவையாகக் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | நிலுவையாக இருந்த பணத்தையும் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 செப்தெம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக முன்னேஸ்வரம் ஓய்வு மண்டபத்திற்காக குத்தகை வாடகையினை குத்தகைதாரர் செலுத்த தவறியிருந்ததுடன் இன்னும் ரூபா 181,347 வாடகைப் பணம் சபையினால் அறவிட வேண்டியிருந்தது. உரிய குத்தகைதாரருடன் சபையினால் மேற்கொண்ட குத்தகை உடன்படிகையின் செல்லுபடித் தன்மை இல்லாமையின் அடிப்படையில் குத்தகைதாரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபை முடியாதிருந்தது. | இது சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் உரிய ரூபா 181,347 பணத்தை அறவீடு செய்யாமை சம்பந்தமாக தற்பொழுது தொடக்க விசாரணை உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது அப்போது கடமைகள் மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | சபையினால் மேற்கொண்ட உடன்படிக்கைகள் முறையான செல்லுபடித் தன்மையுடனும் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க கூடியதாகவும் இருத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொறுப்பேற்கப்படாத 16 காணிகளில் ஒரு காணியை பொறுப்பேற்கும் நடவடிக்கை 2021 ஆம் ஆண்டின் போது முடிவடைந்திருந்ததுடன் 02 காணிகள் பிரதேச செயலாளரின் உரிமையின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் வழங்குவதற்காக தெரிவித்திருந்தும் ஏனைய 13 காணிகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 13 காணிகளையும் சிலாபம் பிரதேச சபையினால் பொறுப்பேற்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என தயவாகத் தெரிவிக்கிறேன். | காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |